தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 25, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003, ஏப்ரல் 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. **காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பர். அவரை நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் - விடைகள். வினா எண் 201, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

201—

நந்தவனம்

***10291—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நந்தவனம் பராமரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 8

(ஆ) ஆம் எனில், அந்த நிலத்தைச் சீர்செய்து, கோயிலுக்கு வருமானம் வரும் வகையில் சமுதாயக் கூடம், திருமண மண்டபம் ஆகியவை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் உள்ள நந்தவனம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நந்தவனப் பகுதியைத் திருமண மண்டபப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த இயலாது. திருக்கோயில் பழக்க வழக்கப்படி நந்தவனமாக மட்டுமே பராமரிக்கப்பட இயலும். திருக்கோயிலுக்கு வெளியே 'வெளி நந்தவனம்' என்று அழைக்கப்படும் இடம் சர்வே எண் 263/1-ஏ-ல் 2.8 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் 159 நபர்கள் வாடகைதாரர்களாக வணிகக் கடைகள் நடத்தி வருகிறார்கள். இவர்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,57,760/- திருக்கோயிலுக்கு வருமானம் வருகிறது. இந்த நிலம் தொகுப்பு வணிக வளாகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால், இவ்விடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் அமைக்க வாய்ப்பில்லை. வேறு இடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் கட்ட சிந்திப்போம் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள் சார்பாக திரு. ஐ. கணேசன்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஐ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே நன்றி. விருத்தாசலம் நகரிலே அமைந்துள்ள அந்த விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஈசன், காசியிலே உள்ளதைவிடப் பெரியது என்று பெரியபுராணத்திலே மிகச் சிறப்பான முறையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 1991-96-லே இருந்த இதே அரசு, அண்ணா தி.மு.க. அரசு, அங்கே மார்க்கெட்டிற்காக 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, கிட்டத்தட்ட கோவில் நந்தவனத்திலிருந்து 300 அடி தூரத்திலே பிரம்மாண்டமான மார்க்கெட்டினைக் கட்டியிருக்கிறது. அந்த மார்க்கெட்டிலே, காய்கறி கடை மற்றும் சில்லரை வியாபாரக் கடைகளை வைத்திருக்கிற காரணத்தால், கோவிலிலிருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் அந்த மணிமுத்தாற்றிலே குப்பைக் கூளம்,*

அழுகிய காய்கனிகளை எல்லாம் கொட்டுவதால், அந்த ஊரில் சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு அங்கே அந்த மார்க்கெட் இருக்கிறது. அதேபோல, நகராட்சிக்கு வரக்கூடிய கோடிக்கணக்கான வருவாய் இந்த ஆலயத்தின் சார்பாக நடத்தப்படக்கூடிய அந்தக் கடைகளின் மூலம் கிடைக்கவில்லை. இந்த அரசினுடைய இரு கண்களாக இருக்கக்கூடியதில் ஒன்று உள்ளாட்சித் துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் கேள்வியை முடியுங்கள் அண்ணே.

திரு. ஐ. கணேசன்: நகராட்சிக்குப் பல கோடி ரூபாய் வரும் என்று அந்த ஆணையாளரே 10 நாளைக்கு முன்னர் டி.வி.-யிலே பேட்டி கொடுத்திருக்கிறார். பல கோடி ரூபாய் நஷ்டத்திலே இந்து சமய அறநிலையத் துறை நடத்திக்கொண்டு இருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கு வருமானம் இல்லை என்று அந்த ஆணையாளரே அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். அதை முன்னிட்டாவது இந்த மார்க்கெட்டை நகராட்சி மூலம் நடத்த அண்ணா தி.மு.க. ஆட்சியால் 27 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டிய அந்த இடத்திலே, இந்த நகராட்சியினுடைய மார்க்கெட் கடைகளை நடத்த அரசு முன்வருமா? அதேபோல நந்தவனப் பகுதி தூய்மையாக இருக்கிறதா என்று சொன்னால், மிகவும் குப்பைக் கூளமாக இருக்கிறது. அதைச் சீர்செய்யவேண்டுமென்று அந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களும் அங்கே நகர மன்றத் தலைவராக இருக்கின்ற..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அவர் எந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று, குழம்பியே போவார். *(சிரிப்பு)* சுருக்கமாக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஐ. கணேசன்: அதைச் சுத்தப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விருத்தாசலம் நகரிலே சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மணிமுத்தாற்றிலே அந்தக் குப்பைகளையெல்லாம் கொட்டுகிறார்கள். நகராட்சிக்கு மிகப் பெரிய கேடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைச் சுத்தப்படுத்தி, அந்த நந்தவனத்தை அழகுபடுத்தி, பக்தர்கள் தங்கக்கூடிய அளவிற்கு கல்யாண மண்டபம் மற்ற மண்டபங்களைக் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 8

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர மன்றத்தைச் சுத்தம் செய்வது நகராட்சியினுடைய பொறுப்பு. அறநிலையத் துறையினுடைய பாதுகாப்பில் உள்ள இடத்தைச் சுத்தம் செய்வது அறநிலையத்தினுடைய/ ஆலயத்தினுடைய பொறுப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வெளியில் 'வெளி நந்தவனம்' என்று அழைக்கப்படும் நிலத்தை விருத்தாசலம் நகராட்சி வாடகைக்கு எடுத்து, நாள் அங்காடியாகப் பயன்படுத்தி வந்தது. கடைசியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 3,300-க்கு வாடகை செலுத்தி வந்தது. நகராட்சி, கோயிலுக்கு வாடகை பாக்கி வைத்து, தொடர்ந்து வாடகை செலுத்த இயலாது எனத் தெரிவித்து விட்டதால், நகராட்சியால் அமர்த்தப்பட்ட அந்த இடத்தில் மொத்தம் 159 நபர்களை அங்கே அமர்த்தி கோயிலின் நேரடி வாடகைதாரர்களாக ஆக்கிக்கொள்ள அரசின் அனுமதியைப் பெற்று 1-1-2001 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.39,000 வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.4,57,760-க்கு மூன்று ஆண்டுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு திருக்கோயிலுக்கு வருமானம் ஈட்டப்பட்டு வருகிறது. இந்த நிலம் தொகுப்பு வணிக வளாகமாகப் பயன்படுத்தப்பட்டு, திருக்கோயிலுக்கு வருமானம் ஈட்டப்பட்டு வருவதால், இவ்விடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் கட்ட இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய இல்லத்திற்கு அருகில் பெண்ணையாற்றைத் தாண்டி இரு கிலோ மீட்டர் தூரத்தில் அரசு கொளஞ்சியப்பர் கல்லூரிக்கு அருகில் 81 செண்ட் இடம் இருக்கிறது, ஆலயத்திற்குச் சொந்தமாக. அந்த இடத்தில் தாங்கள் கேட்கின்ற சமுதாயக் கூடம், திருமண மண்டபம் கட்டுவதற்கு அந்த ஆலயத்தினுடைய இடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், குத்தகையாக 12 ஏக்கர் நிலத்தை அங்கே சாமி தூக்கும் கொத்தர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த இடத்தை வேண்டுமென்றால், திருமண மண்டபம் கட்டுவதற்கும், சமுதாயக் கூடம் கட்டுவதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *202*, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.